**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 15/2021</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **23.01.2026** |
| **பெயர்** | **மகேந்திரன்** |
| **த/பெ** | **கோவிந்தராஜ்** |
| **சாட்சி** | **DW1** |
| **வயது** | **44** |
| **ஊர்** | **பெரியகாவணம்** |
| **தொழில்** | |

**விசாரணை தொடங்கும் நேரம்– 4.10.p.m**

**<u>முதல் விசாரணை–</u>**

1. நான் இவ்வழக்கின் பிரதிவாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமாணப் பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. இவ்வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2. (1). 09.12.1962 தேதியிட்ட முனியன் பெயரிலான கிரையப்பத்திரம் ஆவணம் எண் 1431/1963 என பதிவு செய்யப்பட்ட சான்றிட்ட நகல் **பி.சா.ஆ 1** எனவும்.

(2). 05.06.2013 தேதியிட்ட முனியன் பெயரிலான பட்டா, பட்டா எண் 69 அசல் **பி.சா.ஆ 2** எனவும்.

(3). 14.06.2013 தேதியிட்ட 1ம் பிரதிவாதி மற்றும் சுகுமார் பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ 3** எனவும்.

(4). 01.10.2020 தேதியிட்ட சர்வே ரசீது அசல் **பி.சா.ஆ 4** எனவும்.

(5). 07.01.2014 தேதியிட்ட F.I.R certified copy **பி.சா.ஆ 5** எனவும் குறியீடு செய்யப்படுகிறது.

**விசாரணை முடியும் நேரம். 4.15.p.m.**